# புனித வாரம்
# புனித சனி
## திருவழிபாடு ஆண்டு C

**இன்றைய வாசகங்கள்:**

தொடக்க நூலிலிருந்து வாசகம். 1: 1-2:2,

பதிலுரைப்பாடல். திபா. 118: 1-2,16-17, 22-23,

விடுதலைப் பயண நூலிருந்து வாசகம். 14: 15- 15:1,

மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 16: 1-8

## திருப்பலி முன்னுரை:

நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக் கூடிய அருளைக் கண்டடையவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக.

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று புனித சனி. நம் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பை இன்று நாம் நினைவு கூருகின்றோம். தமது திருப்பாடுகளாலும், சிலுவை மரணத்தாலும் பாவத்தை அழித்து மரணத்தை முறியடித்தவர் மாபரன் இயேசுக் கிறிஸ்து. இறைவனின் மகிமையை எதிர்த்து நிற்கவோ, தடுத்துப் பார்க்கவோ எந்தச் சக்தியாலும் முடியாது என்பதைத்தான் இயேசுவின் உயிர்ப்பு நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. இந்த உயிர்ப்பின் மகிமையில் நாமும் பங்குபெற அழைக்கப்படுகின்றோம் என்பதை உணர்ந்து பெரு மகிழ்ச்சியுடனும், நன்றி உணர்வுடனும் பாஸ்காத் திருவிழிப்பு சடங்கினில் பங்கேற்போம்.

**விசுவாசிகள் மன்றாட்டுகள்:**

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன். பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**வாழ்வின் நாயகனே இறைவா!**

நீர் சாவினை வென்று, பாவத்தை அழித்து, இருளை அகற்றி வெற்றி வீரராய் உயிர்த்தது போல, நாங்களும் எங்கள் வாழ்வில் ஏற்படுகின்ற சோதனைகளில் வெற்றி பெற்று உயிர்ப்பின் மக்களாய் வாழ, உம் வழியில் வெற்றி நடை போடத் தேவையான வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**ஒளியின் பிறப்பிடமே இறைவா!**

இஸ்ரயேல் மக்கள் வேதனைகளையும், இன்னல்களையும் கடந்து பாஸ்காவிழாவைக் கொண்டாடியதுபோல, உமது உடலாகிய எம் திருச்சபையும் அனைத்து எதிர்ப்புகளையும், முரண்பாடுகளையும் கடந்து இந்த உயிர்ப்பின் விழாவினைக் கொண்டாடிடவும், பாஸ்கா விழாவின் கனிகளை நிரம்பப் பெற்று வாழ்ந்திடவும், வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உலகின் மீட்பரே!**

உம்முடைய உயிர்ப்பு விழாவைக் கொண்டாடும் என் பங்கு மக்கள் அனைவருக்காகவும் வேண்டுகிறோம். இறைமக்கள் அனைவரும் உம்முடைய உயிர்ப்பின் ஒளியைப் பெற்று, திருச்சபையின் உண்மையான உறுப்பினர்களாக வாழத் தேவையான அருளைத்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**வாழ்வின் வள்ளலே!**

பல்வேறு பிரச்சனைகளால் அல்லல்படும் எம் நாட்டிற்காக வேண்டுகிறோம். எம் நாட்டு மக்கள் உண்மையான விடுதலை பெறவும், எம் நாட்டுத் தலைவர்கள் சிறப்பாகவும், நேர்மையான முறையில் மக்களை வழிநடத்தவும், வேண்டிய ஞானத்தைத்தர இறைவா உம்மை வேண்டுகிறோம்.

**அனைவரினதும் நலனில் அக்கறை கொண்டு தந்தையே இறைவா!**

இன்றைய திருப்பலியில் பங்கு கொள்ள முடியாமல் நோய்யுற்றிருப்போர் சிறைகளிலும், வதை முகாம்களிலும், அகதிகள் முகாம்களிலும் இருப்போர் பல்வேறு வேலைத்தளங்களில் பணியாற்றுவோர், பயணம் செய்வோர் அனைவர் மீதும் மனமிரங்கி அவர்களும் இன்றைய நாளில் மகிழ்வையும், ஆசியையும் பெற்று மகிழச் செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மாண்பையும், மாட்சியையும் அணிந்துள்ளவரான தந்தையே இறைவா!**

மனித மாண்பை மதிக்கின்ற மனப்பக்குவத்தையும், நல்லெண்ணத்தையும் அனைத்து தலைவர்களிடமும் உருவாக்கி அவர்கள் அமைதியின் கருவியாய் செயல்பட அவர்களை வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஆட்சியில் செயல்களை புரிகின்ற தந்தையே இறைவா!**

மக்களாகிய நாங்கள் ஒவ்வொருவரும் இவ்வளவு சார்ந்தவை பற்றியல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணியவர்களாய் வாழவும், அன்புறவு வாழ்வுக்குள் உயிர்த்தெழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.